1979 ஏப்ரல் 9]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இதுபற்றி ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன,

நம்பியாற்றின் குறுக்கே அணை.

*679 வினா—திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு வேளாண்மைப் பாசனத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நெல்லை மாவட்டம், இராதாபுரம் தொகுதியிலுள்ள அணைக் கரைக்கு அருகே நம்பியாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் ஏதேனும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

(இ) இத் திட்டம் எப்போது மேற் கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) ஆம்.

(ஆ) ரூ. 72 இலட்சங்கள்.

(இ) இத்திட்டம் தற்போது ஆய்வில் உள்ளது. ஆய்வு முடிந்து தகுந்த திட்டமொன்று முடிவெடுக்கப்பட்டால், திட்டம் மேற்கொள்ளப்படும்.

திரு. மு. ஜான் வின்சென்ட் : ராதாபுரம் தொகுதியில் பல பகுதிகள் மிகவும் வறட்சியான நிலையில் இருக்கின்றன. அணைக்கரைப் பக்கத்தில் நம்பியாற்றில் அணை கட்டவேண்டுமென்று பல முறை விண்ணப்பம் செய்தும் எந்தவித நடவடிக்கையும் அரசு எடுக்கவில்லை. பாசனத்திற்குத் தண்ணீர் கிடைக்கவும், குடி நீர்ப் பிரச்னை தீரவும் அணைக்கரைப் பக்கத்தில் நம்பியாற்றுத் திட்டத்தைச் செயல் படுத்தினால் விவசாயிகள் பலரும் பயன் அடைவார்கள். அடுத்த ஆண்டிலாவது இந்தத் திட்டத்தைச் செயல் படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நம்பியாற்றின் குறுக்கே அணை கட்டுகின்ற திட்டத்தின் மூலமாக 417 ஏக்கர் நிலங்களுக்கு பாசனம் உறுதி செய்யப்படும். 167 ஏக்கர் ஆயக்கட்டுக்குப் பயன் கிடைக்கும். இந்தத் திட்டம் ஆய்வில் இருக்கிறது. கூடிய விரைவில் இந்தத் திட்டத்தை மேற்கொள்வதற்கு உண்டான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி, இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்[